நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**284—**

## பாதாளச் சாக்கடைத் திட்டம்

***2372—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்குப் பதிலாக நவீனமுறையில் கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

*முற்பகல் 10–15*

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 58–வது வார்டில், ஈ.வி.கே. சம்பத் சாலையிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏறக்குறைய 1,800 வீடுகளுக்குமேல் தற்போது

*2018 ஜூலை 9]*

*உள்ளன. ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட பாதாளச் சாக்கடை அமைப்பு பராமரிப்பின்றி உள்ளது. அந்தச் சாலையில் தற்போது 3 அடுக்குமாடிக் குடியிருப்புகளாக 1,500 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், ஈ.வி.கே. சம்பத் சாலையில் பெரியார் திடல், தினத்தந்தி அலுவலகம் மற்றும் சென்னை காவல் துறை ஆணையாளர் அலுவலகம் ஆகியவை உள்ளன. சிறு மழை பெய்தால்கூட கழிவுநீர்க் கால்வாய்களும், மழைநீர்க் கால்வாய்களும் நிரம்பி அந்தச் சாலை துண்டிக்கப்படும் அளவிற்கு நிலைமைகள் ஏற்படுகின்றன. அதேபோல் 58–வது வட்டத்தில் உள்ள ரிதர்டன் சாலையில் உள்ள மழைநீர்க் கால்வாய்களையும், கழிவுநீர்க் கால்வாய்களையும் புதியதாக புதுப்பித்துத் தரும்படி இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் இரவிச்சந்திரன், கேள்வியை முடியுங்கள்.*

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிதர்டன் சாலையிலும், ஈ.வி.கே. சம்பத் சாலையிலும் மழைநீர்க் கால்வாய்களையும், கழிவுநீர்க் கால்வாய்களையும் புதுப்பித்து தர இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஈ.வி.கே. சம்பத் சாலையில் குழாய்கள் மாற்றப்பட வேண்டும். 50 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டவை என்று சொன்னார்கள். கண்டிப்பாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மழைநீர் வடிகாலைப் பற்றியும் சொன்னார்கள். அதுகுறித்தும் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மழை நீர் வடிகால் அமைக்கும் பணியை* added area *எல்லாம் சேர்த்து* 3 phases-*ஆகப் பிரித்திருக்கிறோம். அதில்* 1 phase *முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள* 2

*phases–க்கும் நிதி ஆதாரம் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடங்களில் எல்லாம் கண்டிப்பாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

**திரு. அ. நல்லதம்பி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியில் கடந்த 3 ஆண்டுகளாக பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் 90 கி.மீ. தூரத்திற்கு தெருக்களில் பாதாளச் சாக்கடை பைப்புகள் புதைக்கப்பட்டு, அந்தப் பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. TURIF திட்டத்தில் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தார்கள். இருந்தாலும், நிதி வசதி போதுமானதாக இல்லாததால், கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்து, விரைந்து அந்தச் சாலைகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 2017–2018 ஆம் ஆண்டில் வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு விதி 110–ன்கீழ் 343 கோடியே 69 இலட்சம் ரூபாயில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அறிவித்தார்கள். திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் 90 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை பழுதடைந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்பொழுதுமே எவ்வளவு earth work செய்கிறார்களோ அந்த அளவிற்குத்தான் சாலைகள் போட்டுக்கொண்டிருந்தார்கள். இப்போது அச்சாலை அதிகமாகச் சேதமடைந்திருக்கின்ற*

*காரணத்தினால் முழுமையாக எடுத்துச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனியாக ஒரு* meeting *போட்டு சொல்லியிருக்கிறார்கள். நிதி ஆதாரத்தைப் பெற்று, கண்டிப்பாக எவ்வளவு பழுதடைந்துள்ள சாலைகளை எடுத்துக்கொள்ள முடியுமோ அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

**திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் பொற்கால ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், துணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். ஜெயங்கொண்டம் நகராட்சியில் பாதாளச் சாக்கடை அமைப்பதற்குத் திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசுக்குக் கருத்துரு வந்துள்ளதாக அறிகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு, ஜெயங்கொண்டம் நகராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நகராட்சிப் பகுதிகளில் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2016–ல் அறிவித்தபடி, படிப்படியாக எடுத்துக்கொண்டுள்ளோம். 124 நகராட்சிகளிலும் ஒவ்வொரு* scheme *ஆக எடுத்துக்கொண்டுள்ளோம். நிதி ஆதாரம்தான் முக்கியம். ஒவ்வொரு திட்டத்திற்கும் படிப்படியாக நிதி*

*ஆதாரம் செய்யப்பட்டு பணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த நகராட்சியிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

**திருமதி ப. சத்யா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகண்ட பாரதத்தில் அதிக நாள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த பெண் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதி மக்களுக்காக எந்தத் திட்டத்தைக் கேட்டாலும், இல்லை என்று கூறாமல் இன்முகத்தோடு செய்து தருகின்ற மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–20*

*எனது தொகுதியின் நீர் ஆதாரமான மலட்டாற்றைச் சீரமைக்க 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், பண்ருட்டி நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு 3.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், பண்ருட்டி மக்களின் நீண்டநாளைய கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்கென புதிய கட்டடத்தைத் தந்தமைக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றிற்கு உறுதுணை நல்கிய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்திட அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

*2018 ஜூலை 9]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கேள்விக்கு தெரிவித்த அதே பதிலைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் ஆணையின்படி, தற்போதுகூட கும்பகோணம் நகராட்சி, ராஜபாளையம் நகராட்சி, ஆம்பூர் நகராட்சி, திண்டிவனம் நகராட்சி, செங்கல்பட்டு நகராட்சி ஆகிய நகராட்சிகளில் முறையே 55 கோடியே 10 இலட்சம், 258 கோடியே 25 இலட்சம், 205 கோடி, 230 கோடி மற்றும் 124 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் படிப்படியாக ஒவ்வொரு திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த நகராட்சியில், துறை அதிகாரிகளால் ஆய்வு செய்து, நிதி நிலைமையினைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 285, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**285—**

## புதிய கால்நடை மருத்துவமனை

***13548—திரு. தூசி கே. மோகன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செய்யாறு தொகுதி, மேனல்லூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*